

திருச்சுழி சட்டமன்றத் தொகுதி, நரிக்குடி ஊராட்சி ஒன்றியம், பூம்பிடாகை ஊராட்சி, கருவக்குடி கிராமத்தில் இராமநாதபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டப்பட்ட நியாய விலைக் கடை கட்டடத்தினை நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் நரிக்குடி வடக்கு ஒன்றிய செயலாளர் கண்ணன், நரிக்குடி ஒன்றிய பெருந்தலைவர் காளீஸ்வரி சமயவேலு, முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் ஜெயராஜ் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### பாசிச பா.ஜ.க. ஒன்றிய அரசைக் கண்டித்து மதுரை வடக்கு - தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# வாடிப்பட்டியில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

### மாவட்டச் செயலாளர்கள் அமைச்சர் பி.மூர்த்தி - சேடப்பட்டி மு.மணிமாறன் அறிக்கை!

மதுரை, ஜூலை 27 - தலைமை கழக அறிவிப்புக்கு இணங்க தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சிக்கும் பா.ஜ.க. ஒன்றிய அரசைக் கண்டித்து இன்று 27ஆம் தேதி மதுரை வடக்கு மற்றும் மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் வாடிப்பட்டியில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்றும், இதில் கழகத்தினர் பெரும் திரளாக அலைகடலென திரண்டு வந்து பங்கேற்குமாறும் மாவட்டச் செயலாளர்கள் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, சேடப்பட்டி மு.மணிமாறன் ஆகியோர் தமது அறிக்கையில் வேண்டுகோள் விடுத்துள்ளார்கள்.

அதன் விபரம் வருமாறு:-

தொடர்ந்து தமிழ்நாட்டை வஞ்சித்து வரும் ஒன்றிய பா.ஜ.க. அரசு நிதிநிலை அறிக்கையிலும் தமது வஞ்சத்தை காட்டி உள்ளது. ஒரு நாட்டின் நிதிநிலை





அறிக்கை சமச்சீராக இந்தியா முழுவதிலும் உள்ள அனைத்து மாநிலங்கள் பயன்பெறும் வகையில் அமைய வேண்டும், பாசிச பா.ஜ.க. ஒன்றிய அரசு தங்கள் ஆட்சியை காப்பாற்றிக் கொள்வதற்காக சில மாநிலங்களுக்கு மட்டும் நிதியை அள்ளிக் கொடுத்துள்ளது

நாட்டின் வளர்ச்சிக்கு மாபெரும் பங்கு வகிக்கும் தமிழ்நாடு போன்ற சில மாநிலங்கள் மீது வன்மத்தை கக்கி வருகிறது. மெட்ரோ ரயில் திட்டம் மற்றும் தமிழ்நாடு சந்தித்த இரண்டு தொடர் பேரிடர் இழப்புகளுக்கு நிதி ஒதுக்கீடு கோரி பலமுறை கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கோரிக்கை வைத்தும் எந்த பயனும் இல்லை.

இப்படி தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வருவது பாசிச பா.ஜ.க. ஒன்றிய அரசின் மக்கள் விரோத போக்காகும். ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கையின் வஞ்சத்தை கண்டிக்கும் வகையில் தலைமை கழகத்தின் அறிவிப்புக்கு இணங்க இன்று (27.07.2024 - சனிக்கிழமை) காலை 10 மணி அளவில் மதுரை வடக்கு, மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் வாடிப்பட்டியில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

இதில் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, வட்டக் கழக, பேரூர் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், ஊராட்சி செயலாளர்கள், கழக முன்னோடிகள், கழகத்தினர் என பெரும் திரளாக அனைவரும் அலைகடலென திரண்டு வருமாறு மாவட்ட செயலாளர்கள் வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி, சேடப்பட்டி மு.மணிமாறன் தமது அறிக்கையின் மூலம் கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

### ‘நீட்’ குழப்பம்: மருத்துவ மாணவர் சேர்க்கையில்

# மீண்டும் பழைய முறை கொண்டு வரப்படுமா?

### மக்களவையில் டி.எம்.கதிர்ஆனந்த் வினா!

புதுடெல்லி, ஜூலை 27 - நாடாளுமன்ற மக்களவை யில் நீட் தேர்வு வினாத்தாள் கசிவு, மதிப்பெண் வழங்குவதில் ஏற்பட்ட குழப்பம், நீட் முறைகேடுகள், நீட் தேர்வு நடத்துவதை ஒன்றிய அரசு தடை செய்து மருத்துவ மாணவர் சேர்க்கையில் மீண்டும் பழைய முறை கொண்டு வரப்படுமா? என்று வேலூர் மக்களவை எம்.பி. கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.

அவரது கேள்வி வருமாறு:-

மத்திய முகமைகளால் நடத்தப்பட்ட தேர்வுகளில் வினாத்தாள் கசிவுகள் குறித்து அரசிடம் ஏதேனும் தரவுகள் உள்ளதா? கடந்த 10 ஆண்டுகளில் இது போன்ற வினாத்தாள் கசிந்த விவரங்கள்?

சமீபத்தில் நடத்தப்பட்ட தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வு (NEET) தேர்வு முடிவுகள் மதிப்பெண் வெளியிட்டதில் நிர்வாகம் தவறாக கையாளப்பட்டதாகக் கூறப்படுவதற்கு ஒன்றிய அரசிடம் நியாயமான விளக்கம் உள்ளதா?

அப்படியானால், அதன் விவரங்கள்

தவறான நிர்வாகத்தின் புகார்கள் அதிகரித்து வருவதால், குறிப்பாக பொதுப் பல்கலைக்கழக நுழைவுத் தேர்வு மற்றும் NEET தேர்வுகளுக்குப் பிறகு, தேசிய தேர்வு முகமையின் செயல்பாடுகள் குறித்து ஒன்றிய அரசு ஏதேனும் விசாரணை நடத்தியதா?

அதன் விவரங்கள்:

மாணவர் சமூகத்தின் பெரிய அளவிலான எதிர்ப்பைக் கருத்தில் கொண்டு, கவுன்சிலிங் ரத்து செய்யப்பட்டு, நீட் தேர்வுக்கு முந்தைய காலகட்டமாக பழைய முறை மீண்டும் கொண்டு வரப்படுமா?

ஜூன், 2024, 24ஆம்



தேதி அறிவிக்கப்பட்ட நீட் தேர்வு முடிவுகளில் மதிப்பெண்கள், பெயர், ரேங்க் வகை போன்ற மாநிலங்கள் வெவ்வேறு தேர்வுகளுக்கான விண்ணப்பதா ரர்களிடமிருந்து பெறப்பட்ட கட்டணத்தின் மூலம் பெரும் தொகையை ஈட்டினாலும், NTA பல்வேறு தேர்வுகளை தனியார் ஏஜென்சிகளுக்கு வழங்குகிறது. அப்படியானால், தனியார் நிறுவனங்களுக்கு அவுட்சோர்ஸ் செய்யப்பட்ட வேலைகளின் விவரங்கள் மற்றும் அதற்கான காரணங்கள்?

மேலும், மருத்துவக் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கையை மாநில அரசுகளுக்கு விட்டுவிட்டு நீட் தேர்வை ரத்து செய்ய வேண்டும் என்ற கோரிக்கை தமிழகம் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் இருந்து வந்துள்ளதா? ஒன்றிய அரசின் நிலைப்பாடு என்ன? மேலும் காலதாமதமின்றி, நீட் முதுகலை தேர்வுகளுக்கான தேதிகளை அரசால் அறிவிக்கப்பட்டுள்ளதா?

அதற்கு ஒன்றிய அரசின் கல்வி அமைச்சகத்தில் மாநில அமைச்சர் டாக்டர். சுகந்தா மஜூம்தார் எழுத்து பூர்வமாக அளித்த பதில் விவரம் வருமாறு:-

போட்டித் தேர்வுகள் ஆட்சேர்ப்பு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களில் சேர்க்கைக்காக வெவ்வேறு அமைப்புகளால் நடத்தப்படுகின்றன. இத்தேர்வுகள் குறிப்பிட்ட சம்பவங்கள் தொடர்பான தரவுகள் அமைச்சகத்தில் பராமரிக்கப்படவில்லை.

தேசிய தேர்வு முகமை (NTA) NEET(UG) தேர்வை 5 மே 2024 அன்று OMR (பேனா மற்றும் காகிதம்) முறையில் நடத்தியது. தேர்வு நடத்தப்பட்ட பிறகு, சில முறைகேடுகள் / ஏமாற்றங்கள் / முறைகேடுகள் என்று கூறப்படும் வழக்குகள் பதிவாகியுள்ளன.

இந்தியா முழுவதுமான இந்த தேர்வில் ரகசியத் தன்மை ஒரு சந்தர்ப்பத்தில், வினாத்தாளின் பாதுகாப்பு சங்கிலியை மீறும் வாய்ப்பு உள்ளது. சதி, ஏமாற்றுதல், நம்பிக்கை துரோகம் உள்ளிட்ட அனைத்து முறைகேடுகள் குறித்தும் விரிவான விசாரணை நடத்துமாறு கல்வி அமைச்சகம் மத்திய புலனாய்வுப் பிரிவிடம் கேட்டுள்ளது.

கல்வி அமைச்சகம் 22.06.2024 அன்று ஒரு உயர்மட்ட நிபுணர் குழுவை பரிந்துரைத்துள்ளது.

தேசிய தேர்வு ஏஜென்சி மூலம் வெளிப்படையான, சுமூகமான மற்றும் நியாயமான முறையில் தேர்வுகளை நடத்துவதற்கான சீரிய நடவடிக்கைகள் குறித்து தேர்வின் செயல்முறை, தரவு பாதுகாப்பு நெறிமுறைகள் மற்றும் தேசிய சோதனையின் கட்டமைப்பு மற்றும் செயல்பாடுகளில் முன்னேற்றம், சீர்திருத்த ங்கள் குறித்த பரிந்துரைகளை குழு அளிக்கும்.

அதன் அறிக்கையை இரண்டு மாதங்களில் சமர்ப்பிக்க வேண்டும் என்று உச்சநீதிமன்றத்தின் வழிகாட்டுதல்களுக்கு இணங்க, WP (சிவில்) இல் எண். 335/2024, NTA, 18.7.2024 தேதியிட்ட நேரடி உத்தரவை பிறப்பி த்தது அனைத்து விண்ணப்பதாரர்களும் பெற்ற மதிப்பெண்களை அதன் இணையதளத்தில் நகரம் மற்றும் மையத்தில் பதிவேற்றியுள்ளது.

புத்திசாலித்தனமாக போட்டியாளர்களின் அடையாளத்தை வெளியிடாமல் அவர்களின் சுமூகமான மற்றும் நியாயமான நடத்தைக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

போட்டித் தேர்வுகளில் உள்ள உணர்திறனைக் கருத்தில் கொண்டு, பல்வேறு செயல்பாடு மற்றும் பாதுகாப்பு பயோமெட்ரிக், ஃபிரிஸ்கிங், சி.சி.டி.வி. கண்காணிப்பு போன்ற சேவைகளை வழங்குவதற்கான சிறப்பு முகமைகள், சாத்தியமான ஆள்மாறாட்டம், பரீட்சை வழங்குதல் போன்றவற்றைக் கண்டறியும் நோக்கத்துடன் AI அனலிட்டிக்ஸ் முறை பயன்படுத்தப்படுகிறது.

மேற்கூறிய நடவடிக்கைகளுக்கு ஏற்படும் செலவு தொகை நீட் தேர்வுக்கான பதிவு கட்டணத்தில் இருந்து வசூலிக்கப்படுகிறது.

NEET (UG) நாட்டில் மருத்துவ படிப்புகள் தகுதியை நிலை நிறுத்தவும், கல்வியின் லாபம் மற்றும் வணிகமயமாக்கல் சுரண்டலைத் தடுக்கவும் முயல்கிறது. இளங்கலை மாணவர் சேர்க்கைக்கான தரப்படுத்தலுக்காக NEET(UG) தேர்வு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் தற்போது, NEET(UG) தேர்வை ரத்து செய்ய வேண்டும் என்று எந்த முன்மொழிவும் ஒன்றிய அரசின் பரிசீலனையில் இல்லை.

NEET-PG 2024ஐ ஆகஸ்ட் 11, 2024 ஆக நடத்தப்படும் என்று மருத்துவ அறிவியலில் தேசிய தேர்வு வாரியம் இதற்கான தேதியை ஏற்கனவே அறிவித்துள்ளது.

இவ்வாறு அமைச்சர் தனது பதிலில் தெரிவித்தார்.



இராணிப்பேட்டை மாவட்டம். சோளிங்கர் ஊராட்சி ஒன்றியம், மருதாலம் ஊராட்சியில் நடைபெற்ற “மக்களுடன் முதல்வர்” திட்ட முகாமில் கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களைப் பெற்றார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ஜெ.யு. சந்திரகலா, ஒன்றியக் குழுத் தலைவர் அ.கலைக்குமார், மாவட்ட ஊராட்சிகுழு உறுப்பினர் டி.கிருஷ்ண மூர்த்தி மற்றும் மாவட்ட துணைச் செயலாளர் மு.சிவானந்தம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் அ.அசோகன், பேரூர்ச் செயலாளர் பெரியசாமி மற்றும் பலர் உள்ளனர்.

### ஒன்றிய அரசைக் கண்டித்து - மு.தென்னவன் தலைமையில்

# சிவகங்கையில் இன்று ஆர்ப்பாட்டம்!

### மாவட்டச் செயலாளர் - அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் அறிவிப்பு!

சிவகங்கை, ஜூலை 27 - சிவகங்கை மாவட்ட கழகச் செயலாளரும் கூட்டுறவுத்துறை அமைச்சருமான கேஆர்.பெரியகருப்பன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:-

கழக தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பின்படி ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாடு வஞ்சிக்கப் பட்டதை கண்டித்து தமிழ்



நாடு முழுவதும் மாவட்ட தலைநகரங்களில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

அதன்படி சிவகங்கை மாவட்ட கழகத்தின் சார்பில் இன்று (27-ஆம் தேதி - சனிக்கிழமை) காலை 9.00 மணி அளவில் சிவகங்கை அரண்மனைவாசல் சண்முகராஜா கலையரங்கில் முன்னாள் அமைச்சரும், மாநில இலக்கிய அணி புரவலருமான மு.தென்னவன் தலைமையில் நடைபெறுகிறது.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், சார்புஅணி நிர்வாகிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு கே.ஆர். பெரியகருப்பன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

### திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# பாசிச பா.ஜ.க. அரசைக் கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம்!

### கழக தணிக்கைக்குழு உறுப்பினர் கு.பிச்சாண்டி தலைமையில் நடைபெறுகிறது!

திருவண்ணாமலை, ஜூலை 27 - திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில், ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டை வஞ்சித்த பாசிச பா.ஜ.க. அரசைக் கண்டித்து, மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது. கழக தணிக்கைக்குழு உறுப்பினர் கு.பிச்சாண்டி தலைமை வகிக்கிறார்.

முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணையை யேற்று, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு வழிகாட்டுதலின்படி, இன்று (27.07.2024 - சனிக்கிழமை) காலை 9.30 மணிக்கு, திருவண்ணாமலை, அண்ணா சிலை அருகில் திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில், ஒன்றிய நிதிநிலை அறிக்கையில்தமிழ்நாட்டை வஞ்சித்த பாசிச பா.ஜ.க. அரசைக் கண்டித்து, மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

கழக தணிக்கைக்குழு உறுப்பினர் கு.பிச்சாண்டி தலைமை வகிக்கிறார்.

வடக்கு மாவட்டக் கழக செயலாளர் எம்.எஸ்.தரணி வேந்தன், கழக மருத்துவர் அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், தெற்கு மாவட்டக் கழக அவைத் தலைவர் கோ.கண்ணன், வடக்கு மாவட்டக் கழக அவைத் தலைவர் ஆர்.ராஜசேகர், சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன், எஸ். அம்பேத்குமார், ஒ.ஜோதி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கண்டன ஆர்ப்பாட்டத்தில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், மாநில பொறியாளர் அணி செயலாளர் கு.கருணாநிதி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் பொன். முத்து, ஆர்.சிவானந்தம், கே.ஆர்.சீதாபதி, ஆர்.வேல் முருகன், கே.வி.ராஜ்குமார், மாநில விவசாய தொழிலாளர்அணிதுணைசெயலாளர் வ.அன்பழகன், மாவட்ட பொருளாளர்கள் எஸ்.பன்னீர்செல்வம், டி.ஏ.தட்சணா மூர்த்தி, மாவட்ட துணை செயலாளர்கள் ந.பாண்டுரங்கன், ப்ரியா ப.விஜயரங்கன், க.லோகநாதன், விஜயலட்சுமிரமேஷ், ஜெயராணி ரவி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் கே.வி.சேகரன், கோ.எதிரொலி மணியன், மாநில தொ.மு.ச. பேரவைச் செயலாளர் க. சௌந்தரராசன், சிவ.ஜெயராஜ், நகரச் செயலாளர் ப.கார்த்திவேல்மாறன்,

மாவட்ட ஊராட்சிக் குழு தலைவர் பார்வதி சீனுவாசன், துணைத் தலைவர் பாரதி ராமஜெயம், தெற்கு, வடக்கு மாவட்ட அமைப்பாளர்கள் டி.வி.எம்.நேரு, காலேஜ் கு.ரவி, ப.அண்ணாமலை, மங்கலம் பிரபாகரன், ஏ.ஏ.ஆறுமுகம், ஜெ.மெய்கண்டன், பொன்.தனுசு, எச்.சாதிக்பாட்சா, கு.கணேஷ், விஜி (எ) எஸ்.விஜயராஜ், சி.ராம்காந்த், பச்சையம்மன் எஸ்.முத்து,

இரா.கார்த்திகேயன், டாக்டர் பிரவீன்ஸ்ரீதரன், பாலமுரளிகிருஷ்ணா, ஏ.டபள்யு.சர்தார் காசீம், எஸ்.டி.ஆர்.எஸ்.பாபு, பி. கே.ஏ.அருண், கற்பகம்சரவணன், உ.நித்யா, வடக்கு மாவட்டம். எவரெஸ்ட் ந. நரேஷ்குமார், மா.ஏழுமலை, என்.கே.ஏ.பாபு, இ.எஸ். டி.கார்த்திகேயன், கே.ஏ. புஷ்பராஜ், டாக்டர் மகேந்திரன், ஜி.பி.அசோக், பி.எஸ். சாந்தகுமார், ப.மணிகண்டன், அன்னை.சீனுவாசன், பி.செல்வராஜன், ஏ.எம்.சம்பத், அமானுல்லா, இ.மணிகண்டன், தொ.ப.சீ.மதிவாணன், சாது.ஆனந்த், அப்சல் பாஷா, ப.க.மணிவண்ணன், ஆர்.ராம்ரவி, இப்ராஹிம் ஷெரீப், மாலினி வினோத் திவாகரன், இராணிவேங்கடேசன்,

வடக்கு மாவட்ட நகர செயலாளர்கள் ஏ.சி.மணி, கே.விஸ்வநாதன், ஏ.தயாளன், தெற்கு மாவட்ட ஒன்றிய செயலாளர்கள் அ.சிவக்குமார், மு.பன்னீர்செல்வம், வி.பி.அண்ணாமலை, ஆராஞ்சி.ஆறுமுகம், சி.சுந்தரபாண்டியன், மெய்யூர். சந்திரன், த.ரமணன், பெ. கோவிந்தன், ப.கேசவன், கோ.ரமேஷ், சி.மாரிமுத்து, எஸ்.சிவசேமன், க.சுப்பிரமணி, இரா.ராஜேந்திரன், ஆர்.வி.சேகர், கி.ஆறுமுகம், பா.ராமஜெயம், த.செந்தில் குமார், அ.ஏழுமலை, த. மனோகரன், வடக்கு மாவட்ட ஒன்றிய செயலாளர்கள் அ.சுப்பிரமணியன், பி.மனோகரன், ஏ.எழில் மாறன், கே.டி.ராமசாமி, என்.டி.மனோகரன், எஸ். எஸ்.அன்பழகன், எம்.சுந்தர், எஸ்.மோகன், து.மாமது, ஏ.ஞானவேல், என்.சங்கர், எம்.தினகரன், ஜெ.கே.சீனுவாசன், ஏ.ஜி.திராவிட முருகன், எஸ்.ரவிக்குமார், கே.பி.ஆர்.பி.பழனி, சி.ஆர். பெருமாள், ப.இளங்கோவன், டி.ராதா, ஏ.சுந்தரேசன்,


தெற்கு மாவட்ட பொதுக்குழு உறுப்பினர்கள் நா. பழனி, அ.தண்டபாணி, க. பிரபாகரன், டி.கென்னடி, கு.பாலசுப்பிரமணி, கா.சு. இளங்கோவன், அன்பரசி ராஜசேகரன் வடக்கு மாவட்ட பொதுக்குழு உறுப்பினர்கள் ஏ.சி.வி.தயாநிதி, ஏ.எம்.காசி, எம்.கிருஷ்ண மூர்த்தி, வெள்ளைகணேசன், ஆர்.வெங்கடேஷ்பாபு, ஆ. மோகனவேல், ஆர்.நந்தகுமார், அப்சர்லியாகத்பாஷா,

தெற்கு, வடக்கு மாவட்ட பேரூர் செயலாகள் சி.கே. அன்பு, ப.முருகையன், மு. அன்பழகன், எம்.சீனுவாசன், கோ.தனசேகர், ஆர்.முருகன், வி.வெங்கடேசன், கே. கோவர்தணன், வேணிஏழுமலை, டி.கே.மோகன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் மற்றும் கிளைக் கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள், வட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள் பெருந்திரளாக கலந்து கொள்வார்கள்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**சா. இராமமூர்த்தி**

**ஜூலை 27 (2013)**



**இளமைக் காலம் முதலே கழகத்தில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.**

**ஒருங்கிணைந்த சென்னை மாவட்டத்தில் இருபது ஆண்டுகள் வட்டக் கழகச் செயலாளராகவும், பொதுக்குழு உறுப்பினராகவும் பொறுப்புகள் வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**நாடாளுமன்ற மற்றும் சட்டமன்றத் தேர்தல்களில் கழக வேட்பாளர்களின் வெற்றிக்கு அரும்பாடுபட்டவர்.**

**கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**